# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

**26.02.2021**–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை **11.00** மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

---

முன்னிலை : D.உஷாராணி.,
தனி அலுவலர் மற்றும் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்,(பொ)
வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

குறள் :

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

**053.** வந்தவாசி நகராட்சியில் உள்ள வார்டு 1 முதல் 24 வரை வார்டு பகுதிகளில் அரசாணை நிலை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள்.30.04.97ன்படி 142 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் நிரந்தர பணியாளர்கள் 26 எண்ணிக்கை என்கிற அடிப்படையில் தற்பொழுது உள்ளனர்.

வந்தவாசி நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் மூலமாக துப்புரவு பணி மேற்கொள்ள தீர்மானம் எண்.123, நாள்.24.10.2018ம் தேதிய தீர்மானத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.32976/J3/2018 நாள்.04.01.2019ன்படி இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி பெற்ற SB&CO. No.1. E.S. Nagar, Agaram Main Road Selaiyur Thiruvanchery Chennai-73 என்பவருக்கு கடந்த 02.06.2019–ல் ஓராண்டு தூய்மை பணி செய்ய ந.க.எண்.2063/2017/எச்1, நாள்.03.06.2019ன் படியும் ஏல நிபந்தனைகளின்படி மேலும் ஓராண்டுக்கு 01.06.2020 முதல் 31.05.2021 வரை வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தின் மூலம் வந்தவாசி நகரத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் 2016ம் ஆண்டு விதிகளின்படி நகராட்சிக்கு தேவைப்படும் 89 நபர்கள் நல்ல முறையில் சப்ளை செய்து பணி நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

வந்தவாசி நகராட்சி நகரமன்ற தீர்மானம் எண்.50, நாள்.31.05.2019ன்படி SB&CO நிறுவனத்திற்கு ந.க.எண்.2063/2017/எச்1, நாள்.03.06.2019ன்படி மூன்று ஆண்டு காலத்திற்கு புதுபித்து கொள்ள வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இரண்டு ஆண்டு காலம் 31.05.2021 உடன் பூர்த்தி ஆக உள்ளதால் 01.06.2021 முதல் 31.05.2022 வரை 10% ஊதியம் தூய்மை பணியாளர்களுக்கு கூடுதலாக வழங்க வேண்டும் என்கிற நிபந்தனைகளின் அடிப்படையில் தூய்மை இந்தியா திட்டம் 2016ன்படி பணி தொய்வு இல்லாமல் நடைபெறுவதால் 01.06.2021 முதல் 31.05.2022 வரை மேலும் ஓராண்டுக்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| தற்பொழுது வழங்கப்படும் ஊதியம் ஓர் நபருக்கு ஒரு நாளைக்கு | ரூ. 455.00/– |
| ஆண்டு நிர்வாக ஊதிய உயர்வு 10 % | ரூ. 45.50 |
| மொத்தம் | ரூ. 500 . 50 or 500/– |

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிபந்தனைக்குட்பட்டு மேலும் 01.06.2021 முதல் 31.05.2022 வரை ஓர் ஆண்டிற்கு நீட்டிப்பு செய்யப்படுகின்றது. ஓராண்டிற்கு 1,65,00,000/–(Rupees One Crore Sixty Five Lakhs only) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எண். 2063 /2017/எச்1)

054. வந்தவாசி நகராட்சி பகுதியில் வார்டு 1 முதல் 24 வரை டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் நோய் பரப்பும் ஆதாரங்களை வேருடன் அழிக்கவும், தொற்று நோய்கள் பெருந்தாக்க அளவில் தோன்றா வண்ணம் துரிதப்படுத்தவும், கொரோனா நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.9508/2020/பஈ2, நாள்.02.09.2020 மற்றும் செய்யார் சுகாதார பணிகள் ந.க.எண்.2833/இ5/2013ன்படி 01.03.2021 முதல் 31.05.2021 வரை மூன்று மாதத்திற்கு டெங்கு நோய் தடுப்பு பணியாளர்களை நீட்டிப்பு செய்து பணி நடைபெற அனுமதி வேண்டப்படுகின்றது. மக்கள் தொகையின் அடிப்படையில் வந்தவாசி நகராட்சி பகுதிக்கு 35 எண்ணிக்கையில் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், விவரங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் தினக்கூலி வழங்கிடவும் அதற்கு 3 மாதத்திற்கு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எண். 1530 /2020/எச்1)

055. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள ரவுண்டான பகுதியில் உயர்கோபுர விளக்கு அமைத்து பயன்பாட்டில் உள்ளது. இப்பகுதியில் உள்ள ரவுண்டான காமராஜ்சிலையின் கீழ்பகுதியில் சுற்றி வட்டமாக தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் பழுது ஏற்பட்டுள்ளதால் இப்பகுதியினை சரிசெய்து சுற்றி (Grill) கிரில் அமைத்து உள்ளே புல்வெளி வைக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பொதுமக்களின் இக்கோரிக்கையினை ஏற்று பழுதடைந்த பணிகளை சரிசெய்து கிரில் அமைத்து புல்வெளி வைக்க தோராய செலவினம் ரூ.30,000/– மன்றப்பொருள் வைக்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு–

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண். 0011/2021/இ1)

056. வந்தவாசி நகராட்சியில் உள்ள குடிநீர் லாரி பழுதடைந்த காரணத்தினால் கோடைக்காலங்களில் வார்டுகளில் குடிநீர் பிரச்சினை தீர்க்க வாகனம் மூலம் குடிநீர் வழக்கவேண்டும். மேலும் பொதுமக்களின் கோரிக்கைக்காக குடிநீர் விநியோகம் செய்ய நகராட்சியில் உள்ள இலகுரக வாகனமானது பயன்படுத்த வாகனத்தின் போதுமான வாகனதிறன் தேவைப்படுவதால் அவற்றின் சேஸ் மாற்றி கூடுதலாக அமைத்து இரும்பு விசை பம்பினை (Hydrallic pump) சரிசெய்து இதன் மூலம் குடிநீர் தொட்டி அமைக்கும் பணிக்கு தோராய செலவினமாக ரூ.50,000/– மன்றப்பொருள் வைக்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு–

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண். 0011 /2021/இ1)

057. வந்தவாசி நகராட்சியில் 2021–2022 முதல் 2023–2024வரை மூன்று ஆண்டுகளுக்கான குத்தகை இனங்கள் கீழ்கண்ட விவரப்படி 26.02.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

<u>குத்தகை இனம் வரிசை எண்.1</u>

புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 26.02.2021–ல் நடைபெற்ற மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொத மறு ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

<u>குத்தகை இனம் வரிசை எண்.2</u>

காஞ்சிபுரம் ரோட்டில் உள்ள ஆடு அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு . 1.திரு.B.A. பஷீர், 18 மக்தும் மரைக்காயர் தெரு, வந்தவாசி என்பவர் ரூ.74000/–ஒப்பந்தப்புள்ளி தொகை கொடுத்துள்ளார். 2. திரு.E.மஜீத் ஒப்பந்ததாரர், காதர்மீராத் தெரு வந்தவாசி என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.71000/– கொடுத்துள்ளார். மேலும் திரு.E.மஜீத் ஒப்பந்ததாரர் 01.01.2021–ல் பெறப்பட்ட சால்வன்சி சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மூன்றாண்டு சராசரி தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர்.

**குத்தகை இனம் வரிசை எண்.3**

வந்தவாசி நகராட்சி பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்கக்கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.G.முரளி, ஒப்பந்ததாரர், 26, ராமசாமி உடையார் தெரு, வந்தவாசி என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,40,000/– மட்டும் கொடுத்துள்ளார். மேற்படி தொகை மூன்றாண்டு சராசரி தொகையை விட குறைவானது ஆகும். ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி குத்தகை இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மன்றம் நிராகரிக்கலாம்.

**குத்தகை இனம் வரிசை எண்.4**

புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 26.02.2021–ல் நடைபெற்ற மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது மறு ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்கள் 3,7,8,9,11,14,15,17,18,19,20,21,22,23, 24,25,28,29,30 மற்றும் சைவ உணவகம்–1, அசைவ உணவகம்–1க்கு மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது மறு ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை.

அலுவலக குறிப்பு–

2021–2022ம் ஆண்டு முதல் 2023–2024ம் ஆண்டு வரை 3 ஆண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் குத்தகை இனம் எண்.1,2,3,4 ஆகிய இனங்களுக்கு மறு ஏலம் வருகின்ற 05.03.2021 அன்று நடக்க இருந்தது. தற்போது தலைமை பதிவு அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலர், சென்னை கடிதம் எண். 2300/Elec VI (1) 2021–4, நாள். 26.02.2021 தேதிய கடிதத்தில் தேர்தல் model code of conduct நடைமுறையில் உள்ளதாலும், சட்டமன்ற தேர்தல் அறிவிப்பு நடத்தை விதிகள் தேர்தல் முடியும் வரை அமுலில் உள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோர முடியாது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கிக் கொண்ட பின்பு மேல் நடவடிக்கை எடுக்க மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர தனி அலுவலர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க. எண். 99 /2021/ பி1)

058. வந்தவாசி நகராட்சியில் 19.02.2021 அன்று நடைபெற்ற மூன்றாண்டு குத்தகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி (2021–2022 முதல் 2023 –2024 ) 01.04.2021 முதல் 31.03.2024 முடிய ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிக்கையின்படி வரியின எண்.1ல் குறிப்பிட்டுள்ள பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிவறைக்கு கீழ்குறிப்பிட்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பறைக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் குத்தகை காலம் | – 2021 –2022 முதல்<br>– 2023 – 2024 முதல்<br>– 01.04.2021 to 31.03.2024 |
| 2. | சென்ற மூன்றாண்டுகளின் சராசரி குத்தகை தொகை (2018–2019 to 2020–2021) | – 90372– |
| | இதில் 10% கூடுதல் தொகை | – 99409– |

**19.02.2021ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்**

1. திரு.வி.சுந்தரம், ஒப்பந்ததாரர், வந்தவாசி. – 1,05,000
2. திருமதி.அமலா லூர்துமேரி, கோட்டைகாலனி, –1,10,000

சென்ற மூன்றாண்டு சராசரி குத்தகை தொகையை விட கூடுதலாக ரூ.1,10,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய திருமதி.அமலாலூர்துமேரி என்பவர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிவறைக்கு 2021–2022 முதல் 2023–2024 முடிய கட்டணம் வசூலிக்க உத்திரவு வழங்கலாம். தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. உச்சபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய திருமதி.அமலாலூர்துமேரிக்கு உத்திரவு வழங்கிட மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண். 99 /2021/பி1)

059. வந்தவாசி நகராட்சியில் வார்டு–4ல் பாபாசாகிப் தெருவில் மழைநீர் வடிகால் மேல் புதிதாக RCC சிலாப் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.02.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.ஆ.அஜீஸ் | மதிப்பீட்டைவிட0.07% குறைவு |
| 2. | திரு.E.மஜித் | மதிப்பீட்டைவிட 2.77% அதிகம் |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.07% குறைவாக வரப்பெற்றுள்ள **திரு. ஆ.அஜீஸ்** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண். 0010 /2021/இ1)

060. வந்தவாசி நகராட்சியில் வார்டு–24ல் கொசகம்மாள தெரு மழைநீர் வடிகால் வெண்குன்றம் சாலையில் இணைக்க மழைநீர் வடிகால் தரைமட்டம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.02.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.வி.குமார் | மதிப்பீட்டைவிட1.45% அதிகம் |
| 2. | திரு.க.விஸ்வநாதன் | மதிப்பீட்டைவிட 0.14% குறைவு |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.14% குறைவாக வரப்பெற்றுள்ள **திரு. க.விஸ்வநாதன்,** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண். 0010 /2021/இ1)

061. வந்தவாசி நகராட்சி வார்டு–2ல், கோட்டை பழைய காலனி, வார்டு–3, கோட்டைக்குள் தெரு மற்றும் வார்டு–6, KSK நகர் குறுக்கு தெரு கைபம்பு அகற்றி சிறுமின்விசை அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.02.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.இ.மஜீத் | மதிப்பீட்டைவிட1.02% அதிகம் |
| 2. | திரு.ஆ.அஜீஸ் | மதிப்பீட்டைவிட 0.25% குறைவு |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.25% குறைவாக வரப்பெற்றுள்ள **திரு. ஆ.அஜீஸ் ,** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண். 0010 /2021/இ1)

062. வந்தவாசி நகராட்சி வார்டு–13ல், திருநீலகண்டர்தெரு, வார்டு–18, பெரிய காலனி , கைபம்பு அகற்றி சிறுமின்விசை அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.02.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | திரு.இ.மஜீத் | மதிப்பீட்டைவிட0.75% அதிகம் |
| 2. | திரு.ஆ.அஜீஸ் | மதிப்பீட்டைவிட 0.25% குறைவு |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.25% குறைவாக வரப்பெற்றுள்ள **திரு. ஆ.அஜீஸ் ,** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண். 0010 /2021/இ1)

063. வந்தவாசி நகராட்சியில் வார்டு–22 மற்றும் 23ல் உள்ள பொட்டிநாயுடு தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.02.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.வி.குமார் | மதிப்பீட்டைவிட1.30% அதிகம் |
| 2. | திரு.க.விஸ்வநாதன் | மதிப்பீட்டைவிட 0.16% குறைவு |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.16% குறைவாக வரப்பெற்றுள்ள **திரு. க.விஸ்வநாதன்,** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண். 0010 /2021/இ1)

064. வந்தவாசி நகராட்சியில் பொதுசுகாதார பணிக்கு Baillng machine சப்ளை மற்றும் டெலிவரி செய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.02.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | ராஜேஸ்வரி L.நாதன் கெமிக்கல்ஸ் மற்றும் டிரேடர்ஸ் சென்னை–11 | மதிப்பீட்டைவிட0.18% குறைவு |
| 2. | எஸ்.பி.& கோ, சென்னை–73 | மதிப்பீட்டைவிட 0.67% அதிகம் |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.18% குறைவாக வரப்பெற்றுள்ள , **ராஜேஸ்வரி L.நாதன் கெமிக்கல்ஸ் மற்றும் டிரேடர்ஸ் சென்னை–11** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண். 0010 /2021/இ1)

065. வந்தவாசி நகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்ய திரவகுளோரின் கொள்முதல் செய்யும் பணிக்கு பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.02.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு கெமிக்கல்ஸ் | மதிப்பீட்டைவிட0.12% குறைவு |

| | | |
|---|---|---|
| | இண்டஸ்டிரிஸ் சென்னை–62 | |
| 2. | ஸ்ருதி ஆலும் இண்டடிரிஸ், சென்னை–53 | மதிப்பீட்டைவிட 2.91% அதிகம் |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.12% குறைவாக வரப்பெற்றுள்ள, **தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்டிரிஸ் சென்னை–62** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண். 0010 /2021/இ1)

066. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8, கவரைத்தெரு மற்றும் வார்டு எண்.21, சைக்கிள் வரதராஜி தெருவில் உள்ள குடிநீர் பகிர்மான குழாயானது மழைநீர் வடிகால் அருகாமையில் உள்ளதால் மழைநீரானது வீட்டு கழிவுநீர் கால்வாயில் கலந்து குடிநீர் குழாயில் கலக்க நேரிடுகிறது. எனவே பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றன. மேலும் கவரைத்தெருவில் சிறப்புசாலைகள் திட்டம் மூலம் சாலை அமைக்க பணி துவங்கப்படவுள்ளதால் இவ்விரு தெருக்களில் உள்ள பகிர்மான குழாயினை மாற்றி தெருவில் மையப்பகுதியில் அமைக்க வேண்டியுள்ளதால் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920ல் பிரிவு–15ல் பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதலுக்கு.

ந.க. எண். 0010 /2021/இ1)

067.தேர்தல் 2021 –வந்தவாசி வட்டம் 069–வந்தவாசி (தனி) சட்டமன்ற தேர்தல் தொடர்பாக வந்தவாசி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வாக்கு சாவடி மையங்களில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றப்பொருள் வைக்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் (பொ) ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதலுக்கு.
2. வந்தவாசி சட்டமன்ற தொகுதி (தனி) 069 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட வாக்கு சாவடி மையங்களில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1. 50 இலட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் அளித்தல்.

ந.க. எண். 0191 /2021/இ1)

068. வந்தவாசி நகராட்சியில் போதிய எழுத்தர் பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனடியாக பதில் அனுப்பவும், மற்றும் தேர்தல் சம்மந்தமான பணிகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவும், அலுவலக பணிகள் பாதிக்காத வண்ணம் எழுத்தர் பணிகளை கூடுதலாக கவனிக்க (Out Source) எழுத்தராக பணியினை மேற்கொள்ள மார்ச் 2021 முதல் ஆகஸ்ட் 2021 முடிய ஆறு மாத காலத்திற்கு எழுத்தர்பணிகள் மேற்கொள்ள அரசு ஆணை 170, நாள்.18.12.2009ன்படி ஓய்வூதியத்தால் நிகர் பணி மாதம் ஒன்றுக்கு தற்போது வழங்கிய ஓய்வூதியம் பெற்று வரும் முன்அனுபவம் வாய்ந்த எழுத்தர் ஒருவரை (Out Source) முறையில் அமர்த்திக்கொள்ள பிப்ரவரி மாத ஓய்வூதியம் ரூ.23671/–ல் நிகர் பாதி ரூ.11,837/– வீதம் ஆறு மாத காலத்திற்கு செலவினம் ரூ.71,022/–ஐ பொறியாளர், தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ) அவர்களின் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சியில் போதிய எழுத்தர் பணியாளர்கள் இல்லாததால் அவசரம் அவசியம்

கருதியும் நிர்வாக நலன் கருதியும், அரசாணை நிலை எண்.170, நாள்.18.12.2009ன்படி நிபந்தனை (1 முதல் 10 வரை) உட்பட்டு மார்ச் 2021 முதல் ஆகஸ்ட் 2021 முடிய ஆறு மாத காலத்திற்கு (Out Source) முறையில் ஒய்வுப்பெற்ற எழுத்தர் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணியில் அமர்த்திக்கொள்ள, அதற்காகும் செலவினம் ரூ.71022/—மன்றம் ஒப்புதல் அளித்தல்.

ந.க. எண். 1469 /2020/சி1)

069. வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்திவரும் TATA AC TN97/Y/1138 மற்றும் TN97/Y/1267—ன் இன்சூரன்ஸ் காலம் 05.03.2021 உடன் முடிவடைவதால் அவசரம் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதி உடன் கீழ்கண்ட விவரப்படி கட்டணம் செலுத்தி இன்சூரன்ஸ்—ஐ புதுப்பித்துக்கொள்ளவும், அதற்கான கட்டணம் ரூ.40,664/—ஐ யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி செலுத்திட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. TATA AC TN97/Y/1138 – ரூ.20,332
2. TATA AC TN97/Y/1267 -- ரூ.20,332

———————

மொத்தம் ரூ.40,664

————————

அலுவலக குறிப்பு—

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி நிர்வாக நலன் கருதி உடன் இன்சூரன்ஸ் கட்டணம் ரூ.40,664/—ஐ செலுத்தி இன்சூரன்ஸ்—ஐ புதுப்பித்துக்கொள்ளலாம். மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க. எண். 0141 /2021/எச்1)

நகராட்சி பொறியாளர்,

ஆணையாளர்(பொ) மற்றும் தனி அலுவலர்

வந்தவாசி நகராட்சி.